## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 64/2018 | Date : 23.12.2022 | PW1 |
|---|---|---|
| Name: வெங்கட்டம்மாள் | W/o. குருபோயன் | |
| Evidence Recorded Time: 11.56 A.M. to 12.05 P.M. | | |

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

விபத்து நடந்தது 15.01.2017 என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு வயது 65 என்றால் சரிதான். விபத்திற்கு என்னுடைய ஆஜாக்கரதையும் கவனக்குறைவும் தான் காரணம் என்றால் சரியல்ல. நான் தான் சாலையில் திடீரென்று கடந்து சென்றதாலும் என்னுடைய வயது காரணமாக கீழே விழுந்து காயங்கள் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. இந்த விபத்திற்கு 1–ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் காரணம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய வயது, தொழில், வருமானம் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேட்டூர் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றதற்கு காயச் சான்றிதழ், விடுவிப்பு சான்றிதழ், நுண்கதிர் படம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சேலம் யூனிவர்சல் மருத்துவமனையில் 16.01.2017 முதல் 23.01.2017 வரை மொத்தம் 8 நாட்கள் மட்டும் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். 23.01.2017–ற்கு பின்னிட்டு கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்சிகிச்சை எடுத்துக்கொள்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நஷ்டஈடு அதிகம் பெறுவதற்காக எனக்கு ஏற்பட்ட பாதிப்புகளை மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயங்களால் எனக்கு எந்த வித உடல் ஊனமோ, வருமான இழப்போ இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவமனை பில்கள், மருந்து பில்கள், ஆம்புலன்ஸ் பில்கள் மற்றும் பணிப்பெண் வைத்துக்கொண்டதற்கான செலவு தொகை அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஒரே ஒரு மகள்தான் உள்ளார், ஆண் குழந்தைகள் இல்லை. என் மகள் பெயர் மல்லிகா ஆகும். என் கணவர் இறந்துவிட்டார். நான் தனியாகத்தான் உள்ளேன், வேறு யாரும் என் உடன் இல்லை. என் மகள் மல்லிகா என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். என் மகள் தான் என்னை கவனித்துக் கொள்கிறார் என்றாலும் நஷ்டஈடு பெறுவதற்காக பணிப்பெண் வைத்துக்கொண்டேன் என்றாலும் அதற்கு செலவு செய்தேன் என்றாலும் சரியல்ல. நூறு சதவீத உடல் ஊனம் ஏற்பட்டுள்ளதாக வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட பாதிப்புகள் வயது முதிர்வு காரணமாக ஏற்பட்டது என்றாலும் விபத்தினால் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. விபத்து சமயத்தில் 1–ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை

என்றாலும் பாலிசி விதிகள் மீறப்பட்டுள்ளது என்பதால் 2—ம் எதிர்மனுதாரர் எந்த விதமான நஷ்டஈடும் கொடுக்கவேண்டியது இல்லை என்றாலும் சரியல்ல. 1—ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள நஷ்டஈடு அதிகம் என்றாலும் 2—ம் எதிர்மனுதாரரை மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. என்னுடன் வந்துள்ளவர் பெயர் தனசேகரன், அவர் என் மகள் மல்லிகாவின் மகன் எனக்கு பேரன் ஆவார்.

**<u>மறுவிசாரணை — இல்லை.</u>**

ஒம்/—PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.

THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

**M.C.O.P.No.64/2018**

Deposition of PW.2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 23.12.2022.

**Evidence Recorded Time: 12.06 P.M. to 12.20 P.M**

| **Name** | : | **ஜரினா பேகம்** | **Caste** | : | |
|---|---|---|---|---|---|
| **S/o & W/o.** | : | சலீம்பாஷா | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**<u>முதல் விசாரணை</u>:-**

நான் இதில் மனுதாரர் தரப்பு சாட்சி.2 ஆவேன். எனது சத்திய பிரமாண வாக்கு மூலம் தாக்கல். அதில் கண்ட சங்கதிகளை படிக்க கேட்டு அவைகள் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். மேற்படி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மைதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். என்னிடம் காட்டப்படும் ரசீதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது எனக்கு சம்பளம் கொடுத்து அதற்காக கொடுக்கப்பட்ட ரசீது ஆகும். நான் பணிவிடை செய்த அம்மாவின் பெயர் வெங்கட்டம்மாள் ஆகும். அவருடைய இரண்டு கால்களும் உடைந்துவிட்டதாலும், அவருடைய மகள் திருப்பூரில் இருப்பதாலும் என்னை வெங்கட்டாம்மாளின் மகள் மல்லிகா என்னை வேலைக்கு அமர்த்தினார். ஆரம்பத்தில் ரூ.3000/- கொடுத்தார்கள். தற்போது ரூ.5000/- கொடுத்து வருகிறார்கள்.

**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

நீதிமன்றத்திலிந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததா என்றால் வரவில்லை. மனுதாரர் அழைத்ததன் பேரில்தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். பிரமாண பத்திரத்தில் உள்ள முகவரியில் தான் குடியிருந்து வருகிறேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆதார் அட்டை கொண்டு வந்துள்ளேன், அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் குடியிருக்கும்

புதுப்பட்டிக்கும் வெங்கட்டாம்மாள் சென்றாயனூருக்கும் 10 கி.மீ துாரம் இருக்குமா என்றால் தெரியாது. பேருந்தில் செல்வேன், அரை மணி நேரம் பயண நேரம் ஆகும். எனக்கு ஒரு பெண், ஒரு ஆண் குழந்தையும் உள்ளது. எனது மகனுக்கு 24 வயதும், மகளுக்கு 23 வயதும் ஆகிறது. என்னுடைய பிரமாண பத்திரத்தில் என் மகனுக்கு 10 வயது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வெங்கட்டாம்மாளுக்கு பணிவிடை செய்தற்கு ரூ.2,75,000/- பெற்றுக்கொண்டேன் என்று சொல்வது வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ-15 ல் உள்ள ஆவணத்தில் உள்ள வசங்களும், ஸ்டாம் மீது உள்ள கையெழுத்தும் என்னுடையதுதான். பணத்தை பெற்றுக்கொண்டதற்கான வங்கி கணக்கு புத்தகம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.15 ஆவணங்களில் தேதிகள் அடித்து திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களில் உள்ள ஸ்டாம்புகள் அனைத்தும் மொத்தமாக பெறப்பட்டு ரசீதுகளில் ஒட்டப்பட்டு கையெழுத்து பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வெங்கட்டம்மாளுக்கு மகளும், மகள் பேரனும் பார்த்துக்கொள்கிறார்கள் என்றாலும் நான் பார்த்துக்கொள்வதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி மல்லிகா திருப்பூரில் வசித்து வருவதாக சொல்வது பொய் என்றாலும் மல்லிகாவும், அவரது மகனும் வெங்கட்டம்மாளுடன் தான் சேர்ந்து வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்டுக்கொண்டதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ம.சா.ஆ.15 இந்த வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்பதால் அந்த தொகையை கொடுக்க இந்த எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் அல்ல என்றாலும் சரியல்ல.

ஒம்/-PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.